***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 67/2025 – P.W.5 /LW7***

| | |
|---|---|
| *Name* | முருகன் காவல் உதவி ஆய்வாளர்,<br>வலங்கைமான் காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *40* |

*எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார்.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 28.04.2026*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

நான் தற்போது வலங்கைமான் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 25.04.2024ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசங்கரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி வட்ட காவல் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்று 23.04.2024ம் தேதியிட்ட சி.நெ.41/circle/24 dated 24.04.2024 JM No.1 court D.No.282/2024 dated 23.04.2024 ன் படி தபாலை பெற்று பார்வையிட்டு மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.285/2024 ச/பி. 452, 294(பி), 353, 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்காக என் பார்வைக்கு வைக்கப்பட்டது. **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ- 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றையதினம் 13.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மனோசித்ரா மற்றும் செல்வமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சி 1 முதல் 5 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசங்கரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்த வகையில் சம்பவம் உண்மை என தெரியவரவே எதிரியை 30.04.2024 ம் தேதியன்று பந்தலடி உழவர் சந்தை அருகே நின்று கொண்டிருந்தவரை மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.301/2024 வழக்கில் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளரால் குற்றக்காரணம் கூறி கைது செய்தவரை மேற்படி இந்த வழக்கிலும் சம்பந்தப்பட்டவர் என்பது தெரிய வந்தநிலையில் 14.00 மணிக்கு என்னால் சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தப்பட்டது.

இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது ச/பி. 452, 294(பி), 353, 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் குற்றம் என குற்ற இறுதியறிக்கை 14.03.2025 ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டியிருக்கு குற்ற பிரிவுகள் புலன் கொள் குற்ற பிரிவுகள் என்று சொன்னால் சரிதான். புலன் கொள் குற்ற பிரிவுகளாக இருக்கும் பட்சத்தில் உடனே வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். ஒரு நாள காலதாமத்திற்கு என்ன காரணம் என்று சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசங்கரனை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

அசா.1 தங்களிடம் கொடுத்த புகாரிலோ, எனது விசாரணையிலோ தனக்கு அவமானம் ஏற்பட்டதாக எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 452 இதச பிரிவு ஈர்க்கப்பட வேண்டும் என்றால் சம்பவ இடம் தனி நபருக்கு சொந்தமாக இருக்க வேண்டும். அத்துமீறி நுழைந்தாலே trespass தான். இவ்வழக்கில் சொல்லப்படும் சம்பவ இடமான நீதிமனற்ம் public place என்றால் சரிதான். அதனால் 452 இதச பிரிவு ஈர்க்கப்படாது என்று சொன்னால் சரியல்ல.

இதச பிரிவு 506(1)ன் கீழ் குற்றச்சாட்டு சாட்டவேண்டும் என்றால் கொலை மிரட்டல் இருக்க வேண்டும் என்றால் சரிதான். புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, 161 வாக்குமூலத்திலோ எங்காயவது எதிரி கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் மிரட்டினார் என்று சொல்லப்பட்டுள்ளது.

எதிரி ஒன்றும் மிரட்டவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதச பிரிவு 506(1) ஈர்க்கப்படாது என்று சொன்னால் சரியல்ல. அசா.1க்கு சம்பவ நாளில் என்ன பணி என்றும், எந்த பணி தடைப்பட்டு போனது என்பது குறித்து விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அசா.1க்கு சம்பவ நேரத்தில் எவ்விதமான பணியும் தடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. புலன் விசாரணையின் பேரில் உண்மையை தெரிந்து கொள்ள நீதிமன்றத்தில் பொருத்தப்பட்டியிருக்கும் கேமரா காட்சிகளை பெறுவதற்கு ஏதேனும் முயற்சி செய்தேனா என்றால் இல்லை.

அனைத்து ஆவணங்களுமே சொன்ன நேரத்தில் சொன்ன வித்தில் தயார் செய்யப்படாததால் தான் காலதாமதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நாளன்றே அசா.1 தங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றும், அது இந்த வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் அந்த புகார் மறைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,
Mannargudi.